click here to Learn more : https://bit.ly/3ibn2Df

# TRB கல்வியியல் பாடத்திட்டம் (முதுகலை)

**அலகு – I –** முன்தொடக்கக் கல்வி – முன்தொடக்கக் கல்வியின் குறிக்கோள்கள் – அனைவருக்கும் தொடக்கக் கல்வி – கற்றலில் அனைவருக்கும் சம வாய்ப்பு – உயர்நிலைக் கல்வியும் மேல்நிலைக் கல்வியும் – மொழிக் கொள்கை – கற்பித்தல் மொழி – பொதுக்கல்வி அமைப்பின் தேவை – இடைநிலைக் கல்வி – முறைசாராக் கல்வி – வயதுவந்தோர் கல்வி – செயலறிவுக் கல்வி – தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான கல்வித் திட்டங்கள் – திறந்த வெளிப் பள்ளி / திறந்தவெளிப் பல்கலைக்கழகங்கள் – வேலையின்மை – குறைநிலை வேலைவாய்ப்பு – பணியிலிருந்து பட்டத்தை வேறுபடுத்துதல் – இந்தியாவில் தொழிற்கல்வி வளர்ச்சி – திறமை வளர்ச்சி – தொழில்சார் திறனுடன் கூடிய கல்வி – மனிதவள மேம்பாடும் கல்வியும் – அறிவுப்புடைப் பெயர்ச்சி அதற்கான காரணங்கள் – அறிவு வீணாக்கம் – கிராமப்புற மற்றும் மலைசாதி மக்களுடைய பிரச்சனைகள் – எழுத்தறிவின்மையும் வறுமையும் – கல்வியின் மூலம் வறுமையை ஒழித்தல்.

**அலகு – II –** தேசிய ஒருமைப்பாடு – சர்வதேச ஒற்றுமையுணர்வு – மதிப்புக் கல்வியின் செயல்பாடு – சத்துணவும் உடல் நலமும் – சுற்றுப்புறத்தூய்மை – பாதுகாப்பும் முதல் உதவியும் – குறைபாடுடைய குழந்தைகளுக்கான கல்வி – பெண்கல்வி – தனித்திறனுடையோருக்கான கல்வி – மக்கள்தொகைக் கல்வி – சுற்றுச்சூழ்நிலைக் கல்வி – மொழிக் கொள்கை – தனியார் பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளிகள், அரசுப் பள்ளிகள் – சிறுபான்மைப் பள்ளிகள் – ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் – மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் ஆகியவற்றின் நிர்வாகம் –அரசுக் கல்வித்துறை – தலைமையாசிரியர் / தலைமையாசிரியை – கல்வி நிறுவனங்களின் மேற்பார்வையாளர்.

**அலகு – III – தமிழகம் –** அரசியல் – ஆன்மிகம் – மதங்கள் – இலக்கியம் – மொழியியல் கல்வி – இயற்கை வளங்கள் – வணிகம் – வரலாற்றுச் சின்னங்கள் – சுற்றுலாத்தலங்கள் – கலைகள் – விளையாட்டு – சமுதாயம்.

**அலகு – IV –** கற்பவர் – கற்கும் முறைகள் – கற்கும் சூழ்நிலைகள் – கல்வி உளவியல் பற்றி ஆசிரியர்கள் அறிந்து கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் – உடல் வளர்ச்சியும் அறிவு முதிர்ச்சியும் பற்றிய கோட்பாடுகள் – அறிவுத்திறன் கூர்மை வளர்ச்சி – ஒழுங்கு நெறிமுறைகளின் செயல்பாடுகள் – மனத்திறன்களின் வளர்ச்சி – கவனம், கவனமின்மை, கவனச்சிதறல் மற்றும் கவன வீச்சு – புலன் உணர்வும் புலன் காட்சியும் – புலன் காட்சியின் காரணிகள் – புலன்காட்சியில் தவறுகள் – பொதுமைக் கருத்து உருவாக்கம் – பொதுமைக் கருத்துப் படங்கள் – பியாஜேயின் அறிவு வளர்ச்சி பற்றிய கொள்கைகள் – மொழிசார் மனவியல் ஊக்கி – அடைவு ஊக்கியின் இலக்கை அடைவதில் ஆசிரியருக்குள்ள தொடர்புகள்.

**அலகு – V –** குமர பருவத்தினரின் சிறப்பு நடத்தைகள் மற்றும் அவர்களின் பிரச்சினைகள், மனப் பான்மைகள், ஆர்வங்கள், குழு நடவடிக்கைகள், ஒழுக்கம் – தலைமைப் பண்புகள் – கற்றலின் இயல்பும் முக்கியத்துவமும் – கற்றலில் தனிநபர் வேற்றுமை – கற்றல் பாதை – பயிற்சி மாற்றம் – கற்றலின் காரணிகள் – கற்றலின் கொள்கைகள் – முயன்று தவறிக் கற்றல் – ஆக்க நிலையிறுத்தல் – போலக் கற்றல் – நினைவும் மறதியும் – கற்றலில் குறைபாடுகள்.

**அலகு – VI –** குறிக்கோள் – மாஸ்லோவின் படிநிலைத் தேவைகள் கோட்பாடு – பரிசுகள் மற்றும் தண்டனைகளின் செயல்பாடு – அவாவு நிலை – நுண்ணறிவு – நுண்ணறிவின் இயல்பு – நுண்ணறிவு பற்றிய கொள்கைகள் – ஒற்றைக் காரணி, இரட்டைக் காரணி – குழுக் காரணிக் கொள்கைகள் – முதன்மையான உளத்திறன்கள் – கில்போர்ட்டின் நுண்ணறிவுக் கோட்பாடு – பல்காரணிக் கொள்கை – நுண்ணறிவு சோதனைகளைப் பயன்படுத்துதல் – ஆக்கத்திறன் – ஆக்கத்திறனும் நுண்ணறிவும் – ஆக்கத்திறனைக் கண்டறிந்து உயர்த்துதல் – ஆளுமைத் திறன் – ஆளுமைத் திறனின் பொருள் – ஆளுமைத் திறனைப் பாதிக்கும் காரணிகள் – ஆளுமையைப் பற்றிய உளப்பண்பு – உடல்வாகு கொள்கைகள் – ஆளுமையை அளவிடுதல் – ஒருங்கிணைந்த ஆளுமை – உளநலமும் உளநலம் பற்றிய கோட்பாடும் – மனப் போராட்டமும் மன விரக்தியும் – வழிகாட்டுதலும் அறிவுரை பகர்தலும் – தனிநபர் மற்றும் குழு அறிவுரை பகர்தல் – சிறப்பு அறிவுரை பகர்தல்.

**அலகு – VII –** 'கல்விப் புதுமை' என்பதன் பொருள் – கல்விப் புதுமையின் கோட்பாடுகள் – பண்பாட்டு சமுதாய, சமயப் பின்னணியில் பள்ளிகளின் தோற்றம் – கல்விச் சோதனைகளால் விளைந்த கல்விப் புதுமைகள் – தாகூரின் சாந்திநிகேதன், காந்திஜியின் அடிப்படைக் கல்வித் திட்டம் **- A.S.** நீல்ஸின் முன்னேற்றப் பள்ளி – ஸ்ரீ அரவிந்தரின் ஆசிரமப் பள்ளி – ரூஸோவின் குழந்தைக் கல்வி – மாண்டிசோரியின் புலன் உணர்வுக் கல்வி – பெர்ட்ராண்டு ரஸ்ஸலின் மேம்பட்ட சமுதாய நிலைக்கான கல்வி – ஃப்ரோபெல்லின் கிண்டர்கார்டன் – ஜான் டுவியின் பயனீட்டுக் கல்வி – ஜே. கிருஷ்ணமூர்த்தியின் கற்றல், சூழ்நிலைகளின் சுதந்திரம் – சுவாமி விவேகானந்தரின் மனிதனை உருவாக்கும் கல்வி – கல்விப் புதுமைகளில் உளவியலின் தாக்கம் – சுயகற்றல் முறையின் தத்துவங்கள் – பியாஜேயின் ஆய்வும் கண்டறிந்து கற்றலும் – குழந்தை மையக் கல்வி – கல்விப் புதுமைகளில் பண்பாடு, சமய மற்றும் சமூகக் காரணிகளின் தாக்கம் – பொதுவான கல்வி இலக்குகளுக்கான உறுதிப்பாடு.

**அலகு – VIII –** புதுமைக் கல்வித் திட்டம் – தேசியக் கல்விக் கொள்கை (1986) – தேசிய அளவிலான கல்வி நிறுவனங்கள் – ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான இயக்குநரகம் (DTERT), மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சிக்கான நிறுவனம் (DIET), வட்டார வள மையங்கள் (BRC), கூட்டமைப்பு வள மையங்கள் (CRC) – தனியார் உதவி பெறும் மற்றும் உதவி பெறா பள்ளிகளின் நிர்வாக அமைப்புகள் – நூலகம் மூலம் கற்றல், சுயகற்றல், இடநகர்வுப் பள்ளிகள் – வகுப்பறை அல்லாத கல்வி முறைகள் – இராணுவப் பள்ளிகள் – சைனிக் பள்ளிகள் – சிறப்பு கல்வி முறைகள் கணிப்பொறி வழிக் கற்பித்தல், வானொலி மற்றும் தொலைக் காட்சி மூலம் கற்றல்.



click here to Learn more : https://bit.ly/3ibn2Df

click here to Learn more : https://bit.ly/3ibn2Df

# TRB – கல்வியியல்

## அலகு - I

### முன்-தொடக்கக் கல்வி

- தொடக்கக் கல்வி என்பது 3 முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வியாகும்

### தொடக்கக் கல்வியை வழங்கும் பள்ளிகள்

- குழந்தைகளைப் பேணும் பள்ளிகள் (Nursery Schools)
- குழந்தைப் பூங்கா (Kinder Garden)
- விளையாட்டுப் பள்ளி (Play School)
- 1944–இல் சார்ஜெண்ட் அறிக்கை, அரசு குழந்தைகளுக்காக நர்சரிப் பள்ளிகளைத் திறக்கலாம் என அறிவித்தது.
- 1940–இல் இந்தியாவிற்கு வருகை புரிந்த மாண்டிச்சோரி அம்மையார் பல நகரங்களில் மாண்டிச்சோரி பள்ளிகளை நிறுவினார்.
- பிரெரிக் புரோபல் என்பவர் கிண்டர் கார்டன் முறையை அறிமுகப்படுத்தினார்.
- புரோபல், மாண்டிச்சோரி அம்மையார், ரூஸோ ஆகியோர் குழந்தைக் கல்வியுடன் தொடர்புடையவர்கள்.
- மாண்டிச்சோரி அம்மையார் மனோதத்துவ மருத்துவர். இத்தாலியில் மருத்துவ பட்டம் பெற்ற முதல் பெண். இவர் சிறு குழந்தைகளைப் பயிற்றுவிக்க உருவாக்கிய முறை "மாண்டிச்சோரி முறைக் கல்வி" எனப்படுகிறது. இம்முறையை அவர் ஜனவரி 6, 1907–இல் ரோம் நகரில் தனது பள்ளியில் அறிமுகப்படுத்தினார்.
- ரூஸோ என்ற தத்துவவாதி குழந்தைகள் இயற்கையின் போக்கில் வளர அனுமதிக்கப்பட வேண்டும். அவர்கள் இயற்கையோடு இணைந்து இயற்கையின் நியதிகளின்படி வாழ அனுமதிக்கப்பட வேண்டும். குழந்தைப் பருவத்தில் புதிய அனுபவங்களைப் பெற பெற்றோர் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். பெற்றோரின் மிகையான கட்டுப்பாடு பொருத்தமற்றது என்றார்.
- தேசிய கல்விக் கொள்கை(1986)–இல் மழலையர் கல்வியை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தோடு இணைத்து அனைவருக்குமான கல்வித் திட்டத்திற்கு பக்கபலமாக இருக்க வழிவகை செய்யப்படும் என்று கூறப்பட்டுள்ளது.
- அங்கன் வாடிகள் ICDS-யின் (ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்) கீழ் செயல்படுகின்றன.

**மத்திய அறிவுரை கல்விக் கழகம் (Central Advisory Board of Education) முன்–தொடக்கக் கல்வி குறித்து அறிவித்த நியதிகள்.**

- முன் – தொடக்கக் கல்வி இலவசக் கல்வியாக இருக்க வேண்டும்.
- கிராம மற்றும் நகர்ப்புறங்களில் அரசு நர்சரிப் பள்ளிகளைத் தொடங்க வேண்டும்
- இக்கல்வியை பெண் ஆசிரியர் மட்டுமே கற்பிக்க வேண்டும்
- இதற்காக ஆசிரியர்கள் தனிப் பயிற்சி பெற வேண்டும்

### முன்-தொடக்கக் கல்வியின் குறிக்கோள்கள்

- ஆரோக்கியமான உடல்நலம் மற்றும் சிறந்த பழக்கவழக்கங்கள்
- விரும்பத்தகு சமூக மனப்பான்மைகள்
- மனவெழுச்சிப் பக்குவம்
- கலையார்வத்தை வளர்த்தல்
- அறியும் ஆவலைத் தூண்டுதல்
- கருத்துகளை வெளிப்படுத்தும் திறனை வளர்த்தல்
- உடலியக்கத் திறன்
- 1951–இல் முதன்முதலில் மத்திய அரசு இந்தியாவிலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் 2000 பால்வாடிகளை ஆரம்பித்தது.
- தற்பொழுது 1500 மக்கள்தொகைக்கு ஒரு பால்வாடி, அதற்கு ஓர் ஆசிரியை, ஓர் உதவியாளர் என்று நியமித்துள்ளது.

### கல்வியில் சமவாய்ப்புகள் அனைவருக்கும் கிடைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்:

- கல்வி நிறுவனங்கள் நாட்டுடைமையாக்கப்படுதல்
- பொதுநிலைப் பள்ளிகள் (Common School System) திறக்கப்பட வேண்டும்
- மத்திய அரசு மாநிலங்களுக்கிடையே வேறுபாடில்லாமல் கல்விக்காக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். (எ.கா) கேரளாவிற்கு அதிக நிதியும், ஒடிஸாவிற்கு குறைவான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது
- நகர்ப்புற பள்ளிகளின் கல்வித் தரம் கிராமப் பள்ளிகளிலும் இருக்க வேண்டும்
- பெண்கல்விக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும்
- மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பள்ளிகள் அதிகமாகத் திறக்கப்பட வேண்டும்
- மிகவும் பிற்படுத்தப்பட்டோர், நலிவுற்றோர் மற்றும் மலையின மக்களுக்காக பள்ளிகள் அதிகளவில் திறக்கப்பட வேண்டும்
- கல்வி இலவசமாக்கப்பட வேண்டும்
- ஏழை மாணவர்களுக்கு அரசின் நிதியுதவி எவ்வித இடையூறுகளுமின்றி கிடைக்க வேண்டும்
- மேல்நிலை வரை கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டும்

### இடைநிலைக் கல்வி

- உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றில் வழங்கப்படும் கல்வி இடைநிலைக் கல்வியாகும்
- இன்று பெரும்பாலான மாநிலங்கள் 10, +2, +3 கல்வி முறையை 1976 - 77 முதல் நடைமுறைப்படுத்தி வருகின்றன.
- டாக்டர் டி.எஸ். கோத்தாரி குழுவின் (1964-66) அறிக்கையின்படி 1968–இல் கல்வி பற்றிய தேசியக் கொள்கைக்கான தீர்மானத்தை அரசு இயற்றியது. மிசோரம் மேகாலயா தவிர ஏனைய மாநிலங்கள் 10, +2, +3 கல்வி முறையை ஏற்றுக்கொண்டன.

### முறைசாராக் கல்வி

பள்ளிக் கல்வியை விட்டு விலகிய குழந்தைகளுக்கு (9-14) பள்ளிக்கு வெளியே எந்த வகுப்பிலும் சேர்ந்து படிக்க உதவுதல்.

1978–இல் முறைசாரா கல்வித் திட்டம் கொண்டு வரப்பட்டது.

- முறைசாராக் கல்வியின் செயல்பாடுகள்
  - பகுதிநேரக் கல்வி
  - சிறப்புப் பாடங்கள்
  - பெண் கல்வி

UNICEF – இன் நிதியுதவி பெற்று நடத்தப்படும் இக்கல்வித் திட்டம், கற்போர் செய்யும் தொழிலை ஒட்டிய பாடத்திட்டங்களைக் கொண்டே கற்பிக்கப்படுகிறது.

### வயதுவந்தோர் கல்வி

வயது வந்தோர் கல்வியில் ஒருவர் எழுதவும், படிக்கவும், கணக்கறிவையும் மற்றும் அடிப்படை பொருளாதார அறிவையும் பெற முடியும்.

### இந்தியாவில் வயதுவந்தோர் கல்வித் திட்டங்கள்:

- பலநோக்கு வயது வந்தோர் கல்வி
- சமுதாயக் கல்வி
- கிராமப்புற எழுத்தறிவு இயக்கம்
- நேரு இளைஞர் மையங்கள்
- தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டம்
- தேசிய எழுத்தறிவு இயக்கம்
- மக்கள் கல்வி நிலையங்கள்
- அறிவொளி இயக்கம்



click here to Learn more : https://bit.ly/3ibn2Df

click here to Learn more : https://bit.ly/3ibn2Df



**செயலறிவுக் கல்வி**

எழுத்தறிவு இல்லாத ஒருவருக்கு வழங்கப்படும் கல்வியறிவு செயலறிவுக் கல்வியாகும்.

ஒருவர் செய்யும் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படக் கூடிய செயல்களை செய்ய, செயலறிவுக் கல்வி உதவுகிறது.

உழவர்கள், மீனவர்கள், மலையின மக்கள், குடிசைத் தொழில் புரிவோர் போன்றோருக்காக இக்கல்வித்திட்டம் செயல்படுகிறது.

உழவர் செயலறிவுக் கல்வித் திட்டம் 1967–இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியா முழுவதும் 9,000 உழவர் செயலறிவுக் கல்வி மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

**பல்நோக்கு செயலறிவுக் கல்வித் திட்டம்**

இது 1967–இல் தொடங்கப்பட்டது. UNESCO நிதியுதவியுடன் செயல்படுகிறது.

நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும், எழுத்தறிவு இல்லாதவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது.

**தொழிலாளர்களுக்கான கல்வித் திட்டங்கள்**

- கோத்தாரிக் குழு தொழில் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியது. அதனால், 1945–இல் அகில இந்திய தொழில் கல்வி கவுன்சில் ஏற்படுத்தப்பட்டது.
- 1951–இல் யுனெஸ்கோ முதன்முதலாக தொழில் கல்விக்கு நிதியளித்தது.

இந்தியாவில் 356–க்கும் மேற்பட்ட ஐ.டி.ஐ நிறுவனங்கள் தொழிற்கல்வி மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றன.

உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலம் பொதுப் பாடங்களுடன் தொழில் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. (எ.கா.) மெக்கானிக்கல், மின் சாதனங்கள், தொழில்நுட்பச் சித்திரம், நர்சிங், ஹோம் சயின்ஸ் போன்றவை.

**திறந்தவெளிப் பள்ளி**

- கிராமப்புற பெண்களுக்கும், படிப்பை பாதியில் விட்டவர்களுக்கும் தொடர் கல்வி வாய்ப்பினை அளித்தல்.
- வயது வரம்பு தளர்த்தப்பட்டுள்ளது.
- பள்ளி இறுதித்தேர்வுக்குப் பின் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. அதன் மூலம் மேல்நிலைக் கல்வி, திறந்தவெளிப் பல்கலைக் கழகங்கள் வாயிலாகப் படிப்பைத் தொடரலாம்.

**திறந்தவெளிப் பல்கலைக்கழகம்**

எழுதவும் படிக்கவும் மட்டுமே தெரிந்த ஒருவர் பத்தாண்டுகள் படிக்கக் கூடிய கல்வியை 2 ஆண்டுகளில் பெற முடியும் (எ.கா.) மதுரை காமராசர் பல்கலைக் கழகம். இந்திரா காந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக் கழகம் கிராமப்புற மக்கள், மலையின மக்கள், வயது வந்தோர் ஆகியோருக்கான கல்வியை வழங்குகிறது.

- அனைத்துத் தரப்பு மாணவர்களும், வீட்டிலிருந்தபடியே விரும்பிய பாடத்தை, எந்த வயதிலும் படிக்க முடியும்.
- முறையான கல்வித் தகுதியில்லை என்று உயர்க்கல்விக்கான வாய்ப்புகள் மறுக்கப்படுவதில்லை.
- National Institute for Open Schooling(NIOS) என்பது தேசியக் கல்விக் கொள்கையின்படி, மத்திய கல்வி அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படும் கல்வி நிறுவனம் ஆகும். தமிழ்நாட்டில் மாநிலக் கல்வித்துறை மூலம் வயது சான்றிதழைக் கொண்டு நேரடியாக 8–ஆம் வகுப்பும், 8–ஆம் வகுப்பு தேர்ச்சியைக் கொண்டு 10–ஆம் வகுப்புத் தேர்வை தனித்தேர்வர்களாக எழுத முடியும். பின்னர் +2, கல்லூரித் தேர்வுகளையும் எழுத முடியும்.

**கல்வியில் எண்ணிக்கைப் பெருக்கம் மற்றும் தரம்**

- புதிய கல்விக் கொள்கை (1986) கல்வியில் எண்ணிக்கைப் பெருக்கத்தையும், தரத்தையும் வலியுறுத்துகிறது.
- அறிவொளி இயக்கம் கல்வியில் தொகைப் பெருக்கத்தை உறர்த்துவதில் அக்கறை செலுத்துகிறது.
- ஒவ்வொரு குழந்தையும் அடிப்படைக் குறியீட்டளவு தரத்தை அடைந்திருக்க வேண்டும் என்பதே கல்வியின் தரமாகும்.

**கல்வியின் தர மேம்பாட்டு முறைகள்**

- கரும்பலகை இயக்கம்
- ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்
- திருத்தியமைக்கப்பட்ட பாட நூல்கள்
- தேசியக் கல்வி இயக்கம்
- நவோதயாப் பள்ளிகள்

**DIET - District Institute of Education and Training**

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் கற்பிக்கும் தரத்தை உயர்த்துவதற்காக நாடெங்கும் "மாவட்ட ஆசிரியர்கள் பயிற்சி நிறுவனம்"(DIET) தொடங்கப்பட்டுள்ளன.

**NLM - National Literacy Mission**

தேசிய கல்வியறிவு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

**வேலையின்மை**

ஒருவர் தனது கல்வித் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற அளவில் எந்த வேலையும் செய்யாமல் மனித ஆற்றலை வீணாக்குவதே வேலையின்மை ஆகும்.

**குறைநிலை வேலைவாய்ப்பு**

ஒருவர் தனது கல்வித் தகுதிக்கும் திறமைக்கும் சம்மந்தமில்லாமல் குறைவான ஊதியம் பெறும் பணியைச் செய்தால் அது குறைநிலை வேலை வாய்ப்பு எனப்படும்.

**பணியிலிருந்து பட்டத்தை வேறுபடுத்துதல்**

ஒருவரின் பட்டங்களை கணக்கில் கொள்ளாமல், அவரிடமுள்ள பணித்திறன்களைக் கணக்கில் கொள்வதற்கு பணியோடு பட்டங்களைக் கலவாமை என்று பெயர்.

1974–இல் இக்கருத்தை முதன்முதலில் வெளியிட்டவர் UPSC–யின் தலைவராக இருந்த ஏ.ஆர். கித்வாய் (A.R. Kidwai) ஆவார்.

**இந்தியாவில் தொழிற்கல்வி வளர்ச்சி**

தொழிற்கல்வி வளர்ச்சிக்காக பரிந்துரை செய்த குழுக்கள்.

- இராதாகிருஷ்ணன் குழு (1948)
- முதலியார் குழு (1952)
- இந்தியக் கல்விக் குழு (1964-66)
- ஈஸ்வர்பாய் படேல் (1977)
- ஆதிசேஷய்யா குழு (1978)
- புதிய கல்விக் கொள்கை (1986)

தமிழகத்தில் ஏறத்தாழ 1000 மேல்நிலைப் பள்ளிகளில் 50 வகையான தொழிற்கல்விகள் புகுத்தப்பட்டுள்ளன.

**அறிவுப் புடைப் பெயர்ச்சி**

மருத்துவம், பொறியியல், கணினி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் சார்ந்த படிப்புகளை முடித்துவிட்டு தாய்நாட்டுக்குச் சேவை செய்யாமல், அயல்நாடுகளுக்குச் சென்றுவிடுவது அறிவுப் புடைப் பெயர்ச்சி ஆகும்.

**அதற்கான காரணங்கள்**

**அறிவு வீணாக்கம்**

உண்மையான திறமைகளுக்கு தாய் மண்ணில் மதிப்பு இல்லாமல் போவது.

**வாய்ப்புகள் குறைவு**

குறிப்பிட்ட துறையில் ஆராய்ச்சிக்கான வாய்ப்புகள் கிடைப்பது அரிதாக உள்ளது.

**மரியாதையின்மை :** உயர் அதிகாரிகளால் சீண்டப்படுவது.

**அரசியல் குறுக்கீடு**

சாதி, அரசியல், பொருளாதார நலிவு போன்றவைகளால் திறமை பின்னுக்குத் தள்ளப்படுகிறது.



click here to Learn more : https://bit.ly/3ibn2Df

click here to Learn more : https://bit.ly/3ibn2Df



### ஏழ்மை

எழுத்தறிவின்மை, மக்கள்தொகை பெருக்கம் ஆகியவையே ஏழ்மைக்கும் காரணங்களாகும்.

**கல்வியின் மூலம் ஏழ்மையை ஒழித்தல் :**

- அறியாமை நீங்குதல்
- தேசிய வளர்ச்சியில் பங்களிப்பு
- வேளாண்மை உற்பத்தி
- சுயவேலைவாய்ப்பு
- சிறுகுடும்ப நெறி

போன்றவைகளால் ஏழ்மையை ஒழிக்க முடியும். அதற்கு கல்வி அவசியம்.

## இந்தியாவில் கல்வி வளர்ச்சி

'வேதம்' என்ற சமஸ்கிருத சொல்லிற்கு **'அறிவு'** என்பது பொருளாகும். இச்சொல் 'வித்' என்ற சொல்லில் இருந்து பெறப்பட்டது. இதன் பொருள் **'அறிதல்'** என்பதாகும். நமது பண்டையக் கல்வி முறையானது தனிநபரின் உள்ளார்ந்த மற்றும் மறைந்திருக்கும் திறன்களை வெளிக்கொணர்ந்தது. இக்கல்வியானது பணிவு, உண்மை, ஒழுக்கம், சுயச்சார்பு மற்றும் அனைத்து படைப்புகளின் மீதும் மரியாதையுடன் இருத்தல் ஆகியவற்றை வலியுறுத்தியது.

### கற்றலுக்கான ஆதாரங்கள்

பாணினி, ஆர்யபட்டா, காத்யாயனா மற்றும் பதஞ்சலி ஆகியோரின் நூல்களும் சரகர் மற்றும் சுஸ்ருதர் ஆகியோரின் மருத்துவக் குறிப்புகளும் கற்றலுக்கான ஆதாரங்களாக இருந்தன.

### பண்டையக் கால இந்தியாவில் கல்வி முறை

பண்டைய இந்தியாவில் முறையான மற்றும் முறைசாரா கல்வி இரண்டுமே இருந்தன.

வீடுகள், கிராமங்கள் மற்றும் கோயில்களில் இருந்த மக்கள் சிறு குழந்தைகளுக்கு பக்தியுடன் நேர்மையான வாழ்க்கை முறைகளைக் கற்றுக் கொடுத்தனர்.

**கோயில்கள்**

கல்வியை அளிப்பதிலும், கற்றல் மையமாக செயல்படுவதிலும் இவை முக்கியப் பங்கு வகித்தன.

**குருகுலங்கள்**

பல குருகுலங்கள் முனிவர்கள் பெயராலேயே அழைக்கப்பட்டன. காட்டில் அமைதியான சூழலில் அமைந்திருந்த குருகுலங்களில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஒன்றாக தங்கி கல்வி கற்றனர். கல்வி கற்பித்த ஆசிரியர் குரு (அ) ஆச்சார்யா எனப்பட்டார்.

மற்றொரு முறையில் குருவின் வீட்டில் குடும்ப உறுப்பினர் போல தங்கியிருந்து கல்வி பயின்றனர். குருவின் குடும்பம் வீட்டுப்பள்ளி (அ) ஆசிரமமாக செயல்பட்டது.

### கற்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் முறைகள்

வரலாறு, தர்க்கம், பொருள் விளக்கம், கட்டடக்கலை, அரசியல், விவசாயம், வர்த்தகம், கால்நடை வளர்ப்பு, வில்வித்தை, உடற்பயிற்சி மற்றும் பல்வேறு வகையான விளையாட்டுகள் கற்பிக்கப்பட்டன.

மாணவர்கள் சிறந்த வல்லுநர்கள் ஆவதற்கு குருக்கள் திறமையாகப் பணியாற்றினர். இலக்கிய விவாதங்கள், மாணவர்களின் திறமைகளை மதிப்பீடு செய்வதற்காக நடத்தப்பட்டன.

குழுக்கற்றல் முறை நடைமுறையில் இருந்தது. இம்முறையில் கற்றலில் மேம்பட்ட மாணவர்கள் பிற மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்தனர்.

### மடாலயங்கள் மற்றும் விஹாரங்கள்

மாணவர்கள் தங்கள் உயர்கல்விக்காக விஹாரங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குச் சென்றனர். துறவிகள் மற்றும் பெண் துறவிகள் தியானம் செய்வதற்காகவும், விவாதங்கள் நடைபெறுவதற்காகவும், அறிஞர்களிடம் ஆலோசனை பெறுவதற்காகவும் பல மடாலயங்கள் மற்றும் விஹாரங்கள் அமைக்கப்பட்டன. விஹாரங்களைச் சுற்றிலும் உயர்கல்விக்கான மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்தக் கல்வி மையங்களில் சீனா, கொரியா, திபெத், பர்மா, இலங்கை, ஜாவா, நேபாளம் மற்றும் தூரதேசத்து மாணவர்கள் வந்து தங்கியிருந்து கல்வி கற்றனர்.

### தட்சசீலம்

பண்டைய இந்திய நகரமாக இருந்த தட்சசீலம் தற்போது வடமேற்கு பாகிஸ்தானில் உள்ளது. முக்கியமான தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதியான இதனை 1980–இல் யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளமாக அறிவித்தது. சாணக்கியர், **'அர்த்தசாஸ்திரம்'** என்ற தனது நூலை இப்பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்து தொகுத்ததாகக் கூறப்படுகிறது. 19–ஆம் நூற்றாண்டின் மத்தியில் இப்பல்கலைக்கழகத்தின் இடிபாடுகளை தொல்பொருள் ஆராய்ச்சியாளர் **அலெக்ஸாண்டர் கன்னிங்காம்** கண்டறிந்தார்.

### பௌத்த சமய விஹாரங்களும் பல்கலைக்கழகங்களும்

மடாலயங்கள் மற்றும் விஹாரங்கள் மூலமாக பௌத்த சமய அறிஞர்கள் கல்விப் பணியை மேற்கொண்டனர். அதன் விளைவாக தட்சசீலம், நாளந்தா, வல்லபி, விக்கிரமசீலா, ஒடண்டாபுரி மற்றும் ஜகத்தாலா ஆகிய பல்கலைக்கழகங்கள் தோன்றின. இந்தப் பல்கலைக்கழகங்கள் விஹாரங்களின் தொடர்பால் மேம்படுத்தப்பட்டன. பனாரஸ் மற்றும் காஞ்சி ஆகிய இடங்களில் இருந்த பல்கலைக்கழகங்கள் கோயில்களின் தொடர்பால் மேம்படுத்தப்பட்டன.

மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது முதல் அவர்களின் பாடத்திட்டங்களை வடிவமைப்பது வரை அனைத்திலும் ஆசிரியரின் பங்கு முக்கியமானதாக இருந்தது. மாணவர்களின் திறனில் ஆசிரியர் திருப்தி அடையும் போது மட்டுமே அவர்களின் கல்வி நிறைவடைந்ததாகக் கருதப்பட்டது.

மாணவர்கள் எதைக் கற்றுக்கொள்ள ஆர்வமாக இருந்தனரோ அதையே ஆசிரியரும் கற்றுக் கொடுத்தார். விவாதங்கள் மற்றும் கலந்தாலோசித்தல் ஆகியன கற்பித்தலின் அடிப்படையான வழிமுறைகளாக இருந்தன.

### நாளந்தா பல்கலைக்கழகம்

பண்டையக் காலத்தில் நாளந்தா பல்கலைக்கழகம் கி.பி. 5 முதல் 12–ஆம் நூற்றாண்டு வரை கற்றலின் மையமாக இருந்தது. தற்போதைய பீஹாரிலுள்ள ராஜகிருகத்தில் அமைந்துள்ள நாளந்தா பல்கலைக்கழகம் உலகின் பழைமையான பல்கலைக்கழகங்களுள் ஒன்றாகும். நாளந்தா மகா விஹாராவின் இடிபாடுகளை ஐ.நா. சபையின் யுனெஸ்கோ நிறுவனம் உலக பாரம்பரியத் தளமாக அறிவித்துள்ளது. தற்போது நாளந்தா பல்கலைக்கழகம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

### இடைக்கால இந்தியாவில் கல்வி

11–ஆம் நூற்றாண்டில் (இடைக்காலம்) முஸ்லீம் ஆட்சியாளர்கள் தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகளை நிறுவினர். அக்காலத்தில் இந்திய–இஸ்லாமிய பாரம்பரியங்களுக்கு இடையே சிறந்த தொடர்பு இருந்ததால் இறையியல், சமயம், தத்துவம், ஓவியம், நுண்கலை, கட்டடக்கலை, கணிதம், மருத்துவம் மற்றும் வானியல் துறைகள் புதிய கோணத்தில் மேம்பாடு அடைந்தன.

முஸ்லீம் ஆட்சியாளர்கள் நூலகங்கள் மற்றும் இலக்கிய சங்கங்களை ஏற்படுத்தி நகர்ப்புற கல்வியை ஊக்குவித்தனர். அவர்கள் நிறுவிய தொடக்கப்பள்ளிகள் **மக்தப் (Maktab)** எனப்பட்டன. இடைநிலைப் பள்ளிகள் **மதரசா (Madrasa)** எனப்பட்டன.

சுல்தான்கள் மற்றும் பிரபுக்களால் பல மதரசாக்கள் நிறுவப்பட்டன. மதரசாக்களின் முக்கிய நோக்கங்கள் குடிமைப் பணிக்கான பயிற்சி அளிப்பதும், கல்வி அளிப்பதும் ஆகும். டெல்லியில் மதரசாவை நிறுவிய முதல் ஆட்சியாளர் **இல்டுமிஷ்** ஆவார்.

இடைக்கால இந்தியாவில் கல்விமுறையானது உலோமாவின் கட்டுப்பாட்டில் இருந்தது. அந்தக் காலங்களில் கல்வியானது சமயம் சார்ந்து இருந்தாலும் மருத்துவம், அரபு இலக்கியம் மற்றும் இலக்கணம், தத்துவம் ஆகியவையும் கற்பிக்கப்பட்டன. இடைக்காலம் மற்றும் நவீன கால முற்பகுதியில் அரபு மற்றும் மத்திய ஆசிய மக்கள் இஸ்லாமிய அடிப்படையிலான கல்வி முறைகளைக் கொண்டு வந்தனர் என வரலாறு கூறுகிறது. இடைக்கால இந்தியாவில் பெண்கல்வி பரவலாகக் காணப்பட்டது.



click here to Learn more : https://bit.ly/3ibn2Df

click here to Learn more : https://bit.ly/3ibn2Df



ஜெய்பூரைச் சேர்ந்த **ராஜாஜெய்சிங்** அறிவியல் பாடங்கள் கற்பதை ஊக்குவித்தார். டெல்லியிலுள்ள கியாசுதீன் மதரசா மற்றும் ஷாஜகானாபாத்தில் உள்ள மௌலானா சத்ருதீன் மதரசா ஆகியவை தனிநபர்களால் உருவாக்கப்பட்டவை.

இடைக்காலத்தில் பல சமய மடங்களும் மடாலயங்களும் கல்வி வளர்ச்சிக்காக நிறுவப்பட்டன. ஸ்ரீரங்கத்தில் உள்ள அஹோபில மடத்தில் **ஸ்ரீஇராமானுஜர்** கல்விக்காக தன்னுடைய குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார். சமணப் பள்ளிகள் மற்றும் பௌத்த விஹாரங்கள் கல்விக்காக முக்கியப் பங்காற்றியுள்ளன. அவற்றில் அனைத்துத் துறைசார்ந்த நூல்கள் அடங்கிய நூலகங்களும் இருந்தன.

இடைக்காலத்தின் பிற்பகுதியில் ஆங்கிலேயர்கள், இந்தியாவில் ஆங்கிலக் கல்வியை அறிமுகப்படுத்தினர். சமயப்பரப்பு குழுவினரின் வருகையால் இந்தியாவின் மேற்கத்திய கல்விமுறை முன்னேற்றமடைந்தது.

**நவீன கல்விமுறை**

இந்தியாவில் நவீன கல்வி முறையைத் தொடங்கிய முதல் ஐரோப்பியர் போர்ச்சுகீசியர்கள் ஆவர். இயேசு சங்கத்தின் உறுப்பினரான **பிரான்சிஸ் சேவியர்** கொச்சியில் ஒரு பல்கலைக்கழகத்தைத் தொடங்கினார். 1575–இல் கோவாவில் தொடங்கப்பட்ட முதல் கல்லூரியில் கிறித்தவம், தர்க்கம், இலக்கணம் மற்றும் இசை ஆகியன கற்பிக்கப்பட்டு பட்டங்கள் வழங்கப்பட்டன. **ஜான் கிர்னான்டர்** என்பவர் நிறுவிய **இவாஞ்சிலிஸ்ட்க்** என்ற அமைப்பானது, கிறித்தவர் அல்லாத குழந்தைகளுக்கு கல்வியை வழங்கிய முதல் சமயப்பரப்பு அமைப்பாகும். 1812–இல் **C.S. ஜான்** என்பவர் தரங்கம்பாடியில் 20 இலவசப் பள்ளிகளை நிறுவினார்.

**சீகன்பால்கு** மற்றும் **பிளட்சாம்** ஆகிய ஜெர்மன் பிஷப்புகள் திருவிதாங்கூரில் பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி கல்லூரியையும் தொடங்கினர். கி.பி. 1600–இல் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் வருகைக்குப் பின்னர் ஆங்கில கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. கல்கத்தாவின் முதல் பேராயரான **டாக்டர் மிடில்டன்** மிஷினரி கல்லூரி ஒன்றை கல்கத்தாவில் தொடங்கினார். பின்னர் இது பிஷப் கல்லூரி என்று அழைக்கப்பட்டது.

**மவுண்ட்ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டன்** என்பவர் வட்டார மொழிக் கல்வியினை தீவிரமாக முன்மொழிந்தார். ஆனால், 1827–இல் அவர் ஓய்வுபெற்றபின், அவரது ஆர்வலர்கள் நிதி சேகரித்து ஆங்கில கல்வியை பம்பாயில் நிறுவினர். அது 'எல்பின்ஸ்டன் கல்லூரி' எனப் பெயரிடப்பட்டது.

**ஆங்கிலேயரின் ஆட்சியில் கல்வி**

ஆங்கிலேயரின் ஆட்சி காலத்தில் இந்தியக் கல்வியின் வரலாறு நான்கு கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

### 1. ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்கம் முதல் 1813 வரையிலான காலம்

தொடக்ககாலத்தில் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி, கல்விக்கு முக்கியத்துவம் தரவில்லை. 1813–இல் கிழக்கிந்திய நிறுவனம் இந்தியர்களின் கல்விக்கான பொறுப்பை உறுதிப்படுத்த நிர்பந்திக்கப்பட்டது. 1813–ஆம் ஆண்டின் பட்டயச்சட்டம், இந்தியாவில் கல்வியை மேம்படுத்துவதற்காக ஆண்டுதோறும் 1 இலட்ச ரூபாய் வழங்குவதற்கான ஏற்பாட்டை செய்தது. சமயபரப்புக் குழுவினரை தவிர, வங்காளத்தைச் சேர்ந்த இராஜாராம் மோகன்ராய், மதராஸின் பச்சையப்பர், டெல்லியைச் சேர்ந்த பிரேசர் போன்றோர் கல்விக்காக தங்களின் பங்களிப்பைச் செய்தனர்.

### 2. 1813 முதல் 1853 வரையிலான காலம்

இக்காலகட்டமானது கல்விக் கொள்கை பயிற்றுமொழி, கல்வியைப் பரப்பும் முறை ஆகிய பிரச்சனைகளின் மிகப்பெரிய கருத்து வேறுபாடுகள் கொண்ட காலமாகக் கருதப்பட்டது. கீழ்திசைவாதிகள் கீழ்திசை மொழிகளைப் பாதுகாக்கவும், சமஸ்கிருதம் மற்றும் பாரசீக மொழிகளைப் பயிற்று மொழியாக்கவும் விரும்பினர்.

ஆங்கில சார்புவாதிகள் ஆங்கில மொழி மூலம் மேற்கத்திய அறிவை பரப்புவதை ஆதரித்தனர்.

மற்றொரு பிரிவினர் இந்திய மொழிகளே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்றனர். இந்தக் கருத்து வேறுபாடுகள் 1835–இல் மெக்காலேயின் கல்விக் கொள்கை மூலம் ஓரளவு ஓய்ந்தன.

ஒவ்வொரு மாகாணமும் அதற்கேற்ற கல்விக் கொள்கையைப் பின்பற்ற அனுமதிக்கப்பட்ட போதிலும் 1854–ஆம் ஆண்டு வரை கருத்து வேறுபாடுகள் தொடர்ந்தன.

### 3. 1854 முதல் 1920 வரையிலான காலம்

1854–இல் வெளியிடப்பட்ட சார்லஸ் வுட் கல்வி அறிக்கை இந்தியாவில் கல்வியின் '**மகாசாசனம்**' எனப்படுகிறது. ஏனெனில் அனைத்து நிலைகளில் உள்ள மக்களுக்கும் கல்வியை வழங்கக்கூடிய, ஆங்கில கல்விக்கொள்கையின் முதல் அறிக்கை இதுவாகும்.

1882–இல் ஏற்படுத்தப்பட்ட **ஹண்டர் கல்விக் குழு** தொடக்கக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது.

### 4. 1921 முதல் 1947 வரையிலான காலம்

1935–ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் முழுமையான மாகாண சுயாட்சியை அறிமுகப்படுத்தி, மாகாண கல்வி அமைச்சர்களின் நிலையை வலுப்படுத்தியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் கல்வி மேம்பாட்டிற்கான மிகமுக்கியத் திட்டமான **சார்ஜண்ட் அறிக்கை** 1944–இல் தயாரிக்கப்பட்டது.

**வார்தா கல்வித்திட்டம் (1937)**

இத்திட்டத்தை மகாத்மா காந்தியடிகள் உருவாக்கினார். இத்திட்டத்தின் மூலம் அஹிம்சைக் கொள்கையை எதிர்கால குடிமக்களிடையே மேம்படுத்த அவர் விரும்பினார்.

**சுதந்திர இந்தியாவின் கல்வி வளர்ச்சி**

1948–இல் பல்கலைக்கழக கல்வி குறித்த அறிக்கையைத் தயாரிக்க டாக்டர் இராதாகிருஷ்ணன் கல்விக் குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைகளைப் பின்பற்றி உயர்கல்வியின் தரத்தை நிர்ணயிக்க பல்கலைக்கழக மானியக்குழு அமைக்கப்பட்டது.

1952–53–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட இடைநிலைக் கல்விக்குழு, கல்வியில் புதிய அமைப்பு முறைகளையும் பாடப்புத்தகங்களின் தரம், பாடத்திட்டம், கற்பித்தல் முறைகளில் முன்னேற்றங்களில் பரிந்துரைத்தது.

1964–இல் இந்திய அரசு **D.S. கோத்தாரி** தலைமையில் ஒரு கல்விக் குழுவை நியமித்தது. அக்குழு 14 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய தொடக்கக் கல்வியையும் நாடு முழுவதும் ஒரேமாதிரியான 10+2+3 கல்வி அமைப்பையும் பரிந்துரை செய்தது.

**தேசியக் கல்விக் கொள்கை**

### 1968–ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கை

முதல் தேசியக் கல்விக் கொள்கையான இது பொதுவான குடியுரிமை, கலாச்சாரம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டினை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது.

### 1986–ஆம் ஆண்டு புதிய கல்விக் கொள்கை

இது நாட்டில் விளிம்பு நிலை மக்களுக்கான சம வாய்ப்புகள், உதவித் தொகைகள், வயது வந்தோர் கல்வி, திறந்தநிலைப் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் மூலம் கிராமப்புற இந்தியாவில் ஏற்றத்தாழ்வுகளை நீக்குதலை வலியுறுத்தியது. தொடக்கப் பள்ளிகளை தேசிய அளவில் மேம்படுத்துவதற்காக **கரும்பலகைத் திட்டத்தை** அறிமுகப்படுத்தியது.

### 1992–ஆம் ஆண்டு திருத்தப்பட்ட புதிய கல்விக் கொள்கை

இது தேசியக் கலைத் திட்டத்தை வடிவமைத்தல், பணியிடைக் கல்வியை வலியுறுத்துதல், வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் இடைநிலைக் கல்வி நிலையில் மதிப்பீட்டு முறைகளை ஒழுங்குப்படுத்துதல் ஆகியவற்றைப் பரிந்துரைத்தது.

1976–ஆம் ஆண்டு டிசம்பர் வரை கல்வித்துறை மாநிலப் பட்டியலில் இருந்தது. ஆனால் தற்போது பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ளது.



click here to Learn more : https://bit.ly/3ibn2Df